வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 43

# அர்மகெதோனும் உலகத்தின் முடிவும்



Armageddon & The End of the World End

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# அர்மகெதோனும் உலகத்தின் முடிவும்

## Armageddon & The End of the World



கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இன்றைய நாளில் ஜனங்கள் அறிந்துகொள்ள ஆவலாயிருக்கும் உலகத்தின் முடிவு பற்றிப் பார்ப்போம். இந்த உலகம் எப்படி முடிவுக்கு வரும் என்று அறிந்துகொள்வதில் அநேகர் தீவிர ஆர்வங்காட்டுகின்றனர். இந்தப் பாடத்தைப் பற்றிய பல திரைப்படங்கள் வெளியாகியுள்ளன. சமீப காலத்தில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்ட ஆங்கிலப் படமான அர்மகெதோன், உலகத்தின் முடிவு பற்றிய பாடத்தையே கருவாகக்கொண்டது.

ஆகவே இன்று நாம் இந்தப் பாடத்தை ஆராய்ந்து கர்த்தருடைய புஸ்தகத்தில்(ஏசாயா 34:16) கீழ்வரும் கேள்விகளுக்கு என்ன பதில் இருக்கின்றது என்று பார்ப்போம்.

- ‘**இந்த உலகம் எப்படி முடிவுக்கு வரும்?**
- ‘**அர்மகெதோன் என்றால் என்ன?** ”
- ‘இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சம் அல்லது **இரண்டாம் உலகம்(கலாத்தியர் 1:4) எப்படி முடிவுக்கு வரும்?”**

என்று கூறுகின்ற வசனத்தை நமது நினைவுக்குக் கொண்டுவருவதன்மூலம் நாம் இப்பாடத்தை ஆரம்பிப்போம்.

**2பேதுரு 3:7**

***“இப்பொழுதிருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது”***

ஆம். இரண்டாம் உலகம் அக்கினியால் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.
எப்படி இரண்டாம் உலகத்தை அக்கினி அழிக்கும்?

**2பேதுரு 3:10**

***“கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம். பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும்அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்”***

இந்த வசனம்தான் இப்பாடத்தின் திறவுகோலாகும்.

இந்த இரண்டாம் உலகத்தின் முடிவைப்பற்றி இது கூறுகின்றது.

முதலாவதாக கவனிக்கவேண்டிய விஷயம் என்னவெனில் 'அக்கினி" மற்றும் 'எரிதல்" ஆகியவற்றை நாம் சொல்லர்த்தமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஏனென்றால் 'பூதங்கள் மற்றும் அதிலுள்ள கிரியைகள்" தீப்பற்றக்கூடியதல்ல.

- **பூதங்கள் என்பது - உலகத்தின் நான்கு அமைப்புக்களான அரசியல், சமுதாயம், பொருளாதாரம், மதம் ஆகியவற்றைக் குறிக்கும்.**
- **கிரியைகள் என்பது - சுயநலம், பெருமை,பேராசை** இன்னும் கலாத்தியர் 5:19-21இல் கூறப்பட்டுள்ள அனைத்து மாம்சீகக் கனிகளையும் குறிக்கும்.
  மேற்கூறியவற்றுள் எதுவும் சொல்லர்த்தமாக எரிக்கப்படமுடியாதவைகள்.
  இங்குள்ள அக்கினி என்பது - முழுமையான அழிவை அடையாள பாஷையில் குறிப்பிடுகின்றது.

இரண்டாவதாக, இந்த நிகழ்ச்சிகள் சம்பவிக்கும் காலப்பகுதியைக் குறித்துப் பார்ப்போம். அக்கினியின் மூலம் வரும் அழிவு எப்பொழுது சம்பவிக்கும் என்பதற்கு விடை பின்வரும் வசனத்தில் காணலாம்-

2பேதுரு 3:10 ***"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்"***

அந்த காலப்பகுதியானது 'கர்த்தருடைய நாள்" என்று அழைக்கப்படுகிறது.

ஆம். அது கர்த்தருடைய இரண்டாம் வருகையாகிய 1874ம் வருடத்திற்குப் பின்வரும் காலமாகும்.

நாம் இப்பொழுது இந்த காலப்பகுதிக்குள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

அந்த அழிவின் உச்சகட்டத்திற்கு வெகுஅருகாமையில் வாழ்கிறோம்.

**'கர்த்தருடைய நாள்"** என்றழைக்கப்படும் காலப்பகுதியைக் குறித்து
மேலும் சில வசனங்களை நாம் காண்போம் -

ஆமோஸ் 5:18-20

***"கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ அதினால் உங்களுக்கு என்ன உண்டு? கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகாரமாயிருக்கும். சிங்கத்துக்குத் தப்பினவனுக்குக் கரடி எதிர்ப்பட்டதுபோலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்துசுவரின்மேல் தன் கையை வைத்தபோது பாம்பு அவனைக் கடித்ததுபோலவும் இருக்கும். கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல், இருளும் பிரகாசமற்ற அந்தகாரமுமாயிருக்குமல்லவோ?"***

யோயேல் 2:1-3,11

***"சீயோனிலே எக்காளம் ஊதுங்கள். என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள். தேசத்தின் குடிகள் எல்லாம் தத்தளிக்கக்கடவர்கள். ஏனெனில் கர்த்தருடைய நாள் வருகிறது. அது சமீபமாயிருக்கிறது. இது இருளும் அந்தகாரமுமான நாள், அது மப்பும் மந்தாரமுமான நாள், விடியற்கால வெளுப்பு பர்வதங்களின்மேல் பரவுகிறதுபோல ஏராளமான பலத்த ஒரு ஜாதி தீவிரமாக வந்து***

*பரவும். அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும் உண்டானதுமில்லை, இனித் தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டாவதுமில்லை. அவைகளுக்கு முன்னாக தேசம் ஏதேன் தோட்டத்தைப் போலவும், அவைகளுக்குப் பின்னாகப் பாழான வனாந்தரத்தைப்போலவும் இருக்கும். அவைகளுக்கு ஒன்றும் தப்பிப்போவதில்லை"*

**வசனம் 11**-*"கர்த்தர் தமது சேனைக்குமுன் சத்தமிடுவார், அவருடைய பாளையம் மகா பெரிது, அவருடைய வார்த்தையின்படி செய்கிறதற்கு வல்லமையுள்ளது, கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும். அதைச் சகிக்கிறவன் யார்?*

**வசனம் 17, 18** *"..கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது, கர்த்தாவே, நீர் உமது ஜனத்தைத் தப்பவிட்டுப் புறஜாதிகள் அவர்களைப் பழிக்கும் நிந்தைக்கு உமது சுதந்தரத்தை ஒப்புக்கொடாதிரும். உங்கள் தேவன் எங்கே என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்களாக. அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங்கொண்டு, தமது ஜனத்தைக் கடாட்சிப்பார்"*

மேலும் வாசிக்கையில் -

**செப்பனியா 1:7,14-1-8**

*"கர்த்தராகிய ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள். கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது. கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம்பண்ணி, அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார்"*

*"கர்த்தருடைய பெரிய நாள் சமீபித்திருக்கிறது. அது கிட்டிச்சேர்ந்து மிகவும் தீவிரித்துவருகிறது. கர்த்தருடைய நாளென்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான். அந்த நாள் உக்கிரத்தின் நாள். அது இக்கட்டும் இடுக்கமுமான நாள், அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள், அது இருளும் அந்தகாரமுமான நாள், அது மப்பும் மந்தாரமுமான நாள், அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமாக உக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள், மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தபடியால், அவர்கள் குருடரைப்போல் நடக்கும்படி நான் அவர்களை வருத்தப்படுத்துவேன், அவர்கள் இரத்தம் புழுதியைப்போல் சொரியப்படும், அவர்கள் மாம்சம் எருவைப்போல் கிடக்கும். கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை தப்புவிக்கமாட்டாது, அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும், தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம் பண்ணுவார்"*

மேலும் வாசிப்போம் -

**நாகூம் 1:7,8**

*"கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை, தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். ஆனாலும் நினிவேயின் ஸ்தானத்தை*

***புரண்டுவருகிற வெள்ளத்தினால் சர்வசங்காரம்பண்ணுவார்.***
***இருள் அவர் சத்துருக்களைப் பின்தொடரும்"***

மல்கியா 4:1

***"இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும், அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள். வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும், அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"***

இவ்வசனங்கள் அனைத்தும் ***"கர்த்தருடைய நாள்"*** என்பது மகா கொடிதான பழிவாங்கும் நாளாகவும், சரிக்கு சரிக்கட்டும் நாளாக இருக்கும் என்றும் கூறுகின்றன.

***"மேகங்கள்"*** - உபத்திரவங்களுக்கு அடையாளமாக இருப்பதை பின்வரும் வசனத்தில் காண்கிறோம்

செப்பனியா 1:15

***"அந்த நாள் உக்கிரத்தின் நாள், அது இக்கட்டும் இடுக்கமுமான நாள், அது அழிவும் பாழ்க்கடிப்புமானநாள், அது இருளும் அந்தகாரமுமான நாள், அது மப்பும் மந்தாரமுமான நாள்"***

இதன்மூலம் '**கர்த்தருடைய நாள்**" என்பது இந்த உலகத்தின் முடிவு சம்பவிக்கிற காலப்பகுதியாக இருப்பதைக் காண்கிறோம்.

இந்த முடிவு எப்படிநிறைவேறும்? பின்வரும் வசனத்தை வாசித்து, துவங்கலாம் -

2பேதுரு 3:10

***"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம். பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.***



இங்கு ***"வானம், பூமி, பூதங்கள் மற்றும் கிரியைகள்"*** ஆகியவை சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றை மேற்கண்ட வரைபடத்தில் காணலாம் -

ஆம். உலகின் ஆவிக்குரிய மற்றும் மாம்சீக ஆளுகைக்குரிய ஒழுங்கு ஏற்பாடுகள் கடந்த 6000 வருடங்களாக சாத்தானுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறது. இவைஅனைத்தும் முழுமையாக அழிவுக்குள்ளாக்கப்படும்.

இங்கு தேவனுடைய நோக்கம் .. அமைப்புகளை அழிக்கவேண்டும் என்பதே தவிர, அநேக ஜனங்களை அல்ல என்பதை கவனிக்கவும். இயேசுவின் வார்த்தைகளை கவனிக்கும்போது இது தெளிவாகிறது -

லூக்கா 9:56

***"மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்"***

ஒரு மருத்துவர் தன்னுடைய கத்திகளைக்கொண்டு அறுவை சிகிச்சையின்போது அறுத்து குணமாக்குவதுபோல.. தேவனுடைய நோக்கமும் இந்த அழிவின்மூலம் மனுக்குலத்தைக் காப்பாற்றவேண்டும் என்பதேயாகும். இந்த அமைப்புகளாகிய 'பூதங்கள்"எப்படி முடிவுக்கு கொண்டுவரப்படும்' என்பதைக் குறித்து ஆராய்வோம் -

## 1. அரசாங்கம்

இந்த உலகத்தின் அரசாங்க அமைப்புக்கள் அழியப்போவதைக் குறித்து வாசிப்போம் -

செப்பனியா 3:8

***"ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்கிறார். என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன். பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியால் அழியும்"***

இங்கு இந்த வசனத்தில் -

***"ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும்"*** என்று கூறப்பட்டதன் பொருள் என்ன?

அது நாடுகளையும் அரசாங்கங்களையும் ஒன்றுகூட்டுவதைப் பற்றி கூறுகிறது

இந்த தீர்க்கதரிசனம் இன்று நமது கண்களுக்கு முன்பாகவே நிறைவேறுவதை நாம் பார்க்கின்றோம். முதலாவதாக நாடுகளின் ஒருங்கிணைப்பு - லீக் ஆப் நேசன்ஸ் (League of Nations) மூலம் நிறைவேறியது. பின்பு, இன்றைக்கு இருக்கிற ஐக்கிய நாடுகளின் சபை (U.N.O) மூலம், எல்லா தேசங்களும் அரசாங்கங்களும் ஒன்றுசேர்ந்து கொண்டிருக்கின்றன. மற்றும் மொழி மதம் ஆகிய தடைக்கற்களெல்லாம் தகர்க்கப்பட்டு வருகின்றன.



இன்று இதை உலகமயமாக்குதல் என்கிறோம்

தேசங்கள் எல்லாம் தங்கள் சொந்த சுயநலத்திற்காகவே ஒருங்கிணைந்துவருகின்றன. இது அன்பு மற்றும் ஒருவருக்கொருவர் உதவிசெய்தல் என்ற நோக்கத்திற்காக நடைபெறாமல், மற்றவர்களிடமிருந்து நன்மையைப் பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே நடைபெறுகிறது. ஆனாலும் இதன்மூலம் தேவனுடைய நோக்கம் நிறைவேறி வருகிறது.**செப்பனியா3:8** ன் முதல்பாதி கிட்டத்தட்ட நிறைவேறியுள்ளது. அதன் இரண்டாம் பாதியும் வெகு சீக்கிரத்தில் நிறைவேறும் -

***"என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி.. பூமியெல்லாம் என் எரிச்சலின்அக்கினியினால் அழியும்"***

எல்லா தேசங்களும், அரசாங்கங்களும் இப்பொழுது அவர்கள்மேல் வந்துகொண்டிருக்கின்ற மகா உபத்திரவக் காலத்தில், ஒரு பொதுவான படிப்பினையைக் கற்றுக்கொள்வார்கள்.

எரேமியா 30:11

***"உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய் தண்டிப்பேன்"***

இங்கு மட்டாய் தண்டிப்பேன் என்பது - உலகில் உள்ள அனைத்து அரசாங்க அமைப்புகளும் குழம்பி, அரசில்லா நிலைக்கு வழிவகுக்கும்.

இந்தக் காரியங்கள் எல்லாம் தானியேல் 2:34-35ல் கூறப்பட்டிருக்கின்றது -

தானியேல் 2:34-35



***"நீர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, கையால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது. அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப்போட்டது. அப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடைகாலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப் போலாயிற்று. அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டு போயிற்று. சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி, பூமியையெல்லாம் நிரப்பிற்று"***

**'சிலையின்மோதி அதை நொறுக்கி, பதரைப்போல் ஆவது"** - அனைத்துவிதமான அரசாங்க அமைப்புகளும் முழுவதும் சிதறிப்போவதைக் குறிக்கிறது

இது பின்வரும் தீர்க்கதரிசனத்திலும் கூறப்பட்டுள்ளது -

ஆமோஸ் 5:19

***"சிங்கத்துக்குத் தப்பினவனுக்குக் கரடி எதிர்ப்பட்டதுபோலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின்மேல் தன் கையை வைத்தபோது***

*பாம்பு அவனைக் கடித்ததுபோலவும் இருக்கும்"*







இது கர்த்தருடைய நாளில் அனைத்துவித அரசியல் அமைப்புகளும் தோல்வியடைவதை அருமையாக விவரிக்கிறது. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளங்களின் பொருளைக் காண்போம் -

**ஒருவன்** - மனுக்குலமாகிய உலகத்தைக் குறிக்கும் பொதுவான வார்த்தை
**சிங்கத்துக்குத் தப்புவது** - கர்த்தருடைய நாளின் துவக்கத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்

**சிங்கத்துக்குத் தப்பிஓடுதல்** - 1914ம் வருடத்திற்குப் பின்பும் முதலாம் உலக யுத்தத்திற்கு பின்பும் முடியரசு ஆட்சியிலிருந்து விடுதலையாக்கப்பட்டதைக் குறிக்கும்

**கரடி எதிர்ப்பட்டதுபோலவும்** - முடியரசு முடிந்தபின்பு பிரபலமடைந்த கம்யூனிச அரசாங்க அமைப்பு. இது ரஷ்யா, சீனா மற்றும் ஐரோப்பாவின் அநேக நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அநேக தேசங்களில் மறைந்துவிட்டது.

இது அடுத்தவிதமான அரசாங்க அமைப்புக்கு வழிவகுத்தது.

**'வீட்டுக்குள்ளேவந்து சுவரின்மேல் தன் கையை வைத்தபோது"** - இங்கு வீடு என்பது அடுத்து பிரபலமடைந்த குடியரசு ஆட்சியை அடையாளப்படுத்துகிறது.
இதுமக்களிடமிருந்து, மக்கள்மூலமாக, மக்களுக்காக உருவானதாகும்.

**'ஆனால் சுவரின்மேல் தன் கையை வைத்தது"** - குடியாட்சி பாதுகாப்பானதும், ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசாங்கஅமைப்பாக சிலகாலம் தோன்றினாலும், அதுவும் வீழ்ச்சியடையும் என்று பார்க்கிறோம்.
**'பாம்பு அவனைக் கடித்தது"** - பாம்பு என்பது குடியரசாட்சிக்கு தோல்வியை உண்டுபண்ணும் பொய் மற்றும் வஞ்சனைகளைக் குறிக்கிறது.

இவ்விதமாக அனைத்து விதமான அரசாங்க அமைப்புகளும் இறுதியில் தோல்வியடைந்து ஒழுங்கின்மை மற்றும் குழப்பநிலை உருவாகுவதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**சகரியா 14:13**

***"அந்நாளிலே கர்த்தரால் பெரிய கலக்கம் அவர்களுக்குள் உண்டாகும்.
அவனவன் தன் தன் அயலானின் கையைப் பிடிப்பான்.
அவனவனுடைய கை அவனவன் அயலானுடைய கைக்கு விரோதமாக இருக்கும்"***

அனைத்துவிதமான அரசாங்கஅமைப்புகளும் அழிவதன் விளைவாக இந்த ஒழுங்கின்மை ஏற்படும். இதுவே பூமியின் மீதான மகா உபத்திரவக் காலமாகும்.

இப்பொழுது பூமியின் இரண்டாவது அமைப்பினைப் பார்ப்போம் -

# 2. சமுதாயம்

ஏசாயா 24:1-5

***"இதோ, கர்த்தர் தேசத்தை வெறுமையும் பாழுமாக்கி, அதைக் கவிழ்த்து, அதின் குடிகளைச் சிதறடிப்பார். அப்பொழுது ஜனத்துக்கு எப்படியோ அப்படியே ஆசாரியனுக்கும். வேலைக்காரனுக்கு எப்படியோ அப்படியே எஜமானுக்கும். கொண்டவனுக்கு எப்படியோ அப்படியே விற்றவனுக்கும், கடன் கொடுத்தவனுக்கு எப்படியோ அப்படியே கடன் வாங்கினவனுக்கும். வட்டி வாங்கினவனுக்கு எப்படியோ அப்படியே வட்டி கொடுத்தவனுக்கும், எல்லாருக்கும் சரியாக நடக்கும். தேசம் முழுதும் கொள்ளையாகி, முற்றிலும் வெறுமையாகும். இது கர்த்தர் சொன்ன வார்த்தை, தேசம் புலம்பி வாடும். பூமி சத்துவமற்று உலர்ந்துபோகும். தேசத்து ஜனத்திலே உயர்ந்தவர்கள் தவிப்பார்கள். தேசம் தன் குடிகளின் மூலமாய் தீட்டுப்பட்டது"***

பூமி என்பது சமுதாயம் அல்லது சமுதாய அமைப்புகளைக் குறிப்பதை வசனம் 1 உறுதிப்படுத்துகிறது.. இங்கு பூமி என்பது சமுதாய அமைப்பையும், தீமையின் ஆட்சிக்காலத்தில் அந்த சமுதாயத்தின் நிலை மாற்றப்பட்டு தாழ்த்தப்பட்டோர் உயர்த்தப்பட்டும், உயர்த்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டும் போவதைக் குறிக்கும். இதை பின்வரும் வசனத்தில் தெளிவாகக் காணலாம் -

ஏசாயா 40:4

***"பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு கோணலானது செவ்வையாகி, கரடு முரடானவை சமமாக்கப்படும் என்றும்"***

***"பள்ளமெல்லாம் உயர்த்தப்படும்"***- பள்ளம் என்பது அடிப்படையான மனித உரிமைகளைப் பெறாமல் அதற்கு கீழ் வாழ்கிற சமுதாயத்தில் உள்ள ஒடுக்கப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட ஜனங்களைக் குறிக்கும். இந்த வகுப்பர் அடிப்படை மனித உரிமைகளுக்கு மேலாக 'உயர்த்தப்பட்டு", தங்களுடைய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் இருப்பிடம் போன்றவற்றை பெற்று உலக மனுக்குலத்தில் மரியாதைக்குரிய நிலையை அடைவர்.

***"சகல மலையும் குன்றும் தாழ்த்தப்படும்"*** - மலை மற்றும் குன்று என்பது அடிப்படை உரிமைகளுக்கு மேலான நிலையில் வாழும் செல்வந்தர்கள் மற்றும் அதிகாரத்தில் உயர்ந்தவர்களைக் குறிக்கும்.

இந்த வகுப்பார், பலவிதமான அனுபவங்கள்மூலம்.. அவர்கள் பெற்றிருக்கும் விசேஷ உரிமைகள் மற்றும் சாதகமான சூழ்நிலையிலிருந்து அகற்றப்பட்டு தாழ்த்தப்படுவார்கள்.

இவ்விதமாக சமுதாயத்தில் உள்ள பலதரப்பட்ட ஜனங்களும் சமமாக நடத்தப்படுவதன் மூலம், பாரபட்சங்களும் ஏற்றத்தாழ்வுகளும் நீக்கப்படும்.

இதற்கு அருமையான உதாரணமாக இந்தியாவில் காணப்பட்ட ஜாதி மத வேற்றுமை இருக்கிறது. அதில் ஏழைகள், கூலியாட்கள் மற்றும் இழிவான வேலைகளைச் செய்வோர் ஹரிஜன்கள் என்றும், "***தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர்***" என்றும் பிரிக்கப்பட்டனர். இவர்கள் "***தீண்டத்தகாதவர்கள்***" என்று அழைக்கப்பட்டனர். ஆனால் இன்று அவ்விதமான வேற்றுமைகள் படிப்படியாக அகற்றப்பட்டு மறைந்துவருவதை நாம் காண்கிறோம். இவை மறைந்து வருவதற்குக்

காரணமாக கலப்புத் திருமணங்கள், இவ்வகுப்பாருடைய சந்ததிகளுக்கு கிடைத்த கல்வி போன்றவை உள்ளது.

இவையனைத்தும் 80 வருடங்களுக்கு முன்பாக சாத்தியமில்லாதவைகளாக இருந்தன. இந்த வேற்றுமை வித்தியாசங்கள் முற்றிலுமாக தகர்க்கப்படும் என்பதை பின்வரும் வசனத்தில் அடையாளமாக காண்பிக்கப்பட்டுள்ளது-

ஏசாயா 24:19-20

***"தேசம் நொறுங்கவே நொறுங்கும். தேசம் முறியவே முறியும். தேசம் அசையவே அசையும். வெறித்தவனைப்போல தேசம் தள்ளாடி ஒரு குடிலைப்போலப் பெயர்த்துப்போடப்படும். அதின் பாதகம் அதின்மேல் பாரமாயிருக்கையால் அது விழுந்துபோம். இனி எழுந்திராது"***



தற்போதைய நிலையிலுள்ள சமுதாயம் நிரந்தரமாக அழிவுக்குள்ளாவதை இவ்வசனம் கூறுகிறது. இப்பொழுது 'பூமியின்" மூன்றாவது அமைப்பைக் குறித்து பார்ப்போம் -

## 3. பொருளாதாரம்

யாக்கோபு 5:1,4

***"ஐசுவரியவான்களே கேளுங்கள். உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்... இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது. அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது"***

இங்கு முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் உருவாக இருக்கும் மிகப்பெரிய மோதலைக் குறித்து அப்போஸ்தலனாகிய யாக்கோபு தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். உலகில் உள்ள பொருளாதார அமைப்புகள் அனைத்தும் இந்த இரு வகுப்பாரை உள்ளடக்கியுள்ளது. முதலாளி வர்க்கம் அநீதியை அடிப்படையாகக்கொண்டு செயல்பட்டு, தொழிலாளர்கள்மேல் ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை பின்வரும் வசனம் விவரிக்கிறது -



***வசனம் 5 - "பூமியில் நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து சுகபோகத்தில் உழன்றீர்கள். கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள்"***

இந்த இருவகுப்பாரிடையே உள்ள வேற்றுமைகள் - உணவு உடை இருப்பிடம் மற்றும் வாழ்க்கைமுறையில் வெளிப்படுகிறது.



இந்த வேற்றுமையே 18ம் நூற்றாண்டில் நடந்த பிரென்ச் புரட்சிக்குக் காரணம். வாசற்படியில் கூடிவந்து **"*உண்ணஉணவு இல்லை*"** என்று முறையிட்ட ஜனங்களைப் பார்த்து, 'கேக் சாப்பிடுங்கள்" என்று பிரான்சு தேசத்தின் ராணி கூறியதன் விளைவாக இந்த புரட்சி வெடித்தது. அந்த ராணி மற்றும் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் மதத்தின் அடிப்படையில் மக்களை ஒடுக்கினவர்கள் அனைவரின் தலைகளும் துண்டிக்கப்பட்டன. இந்த பிரென்ச் புரட்சி எதிர்காலத்தில் வரவிருக்கும் உலகப் புரட்சிக்கு ஒரு முன்னடையாளமாக இருக்கிறது.

இன்று விலையேறப்பெற்றதாகக் கருதப்படுகின்ற தங்கமும், பணமும் அடைகிற நிலையைவாசிப்போம்

எசேக்கியேல் 7:19

***"தங்கம் வெள்ளியைத் தெருக்களில் எறிந்து விடுவார்கள். அவர்களுடைய பொன் வேண்டா வெறுப்பாயிருக்கும்..அவர்கள் அக்கிரமமே அவர்களுக்கு இடறலாயிருந்தது"***

இன்று பொக்கிஷமாகக் கருதப்படுபவைகள் அனைத்தும் பிரயோஜனமற்ற நிலைக்குத் தள்ளப்படும்.

அப்பொழுது முதலாளி வார்க்கத்திற்கு சம்பவிப்பதை வாசிக்கையில் -

புலம்பல் 4:5

***"ருசியான பதார்த்தங்களைச் சாப்பிட்டவர்கள் வீதிகளில் பாழாய்க் கிடக்கிறார்கள். இரத்தாம்பரம் உடுத்தி வளர்ந்தவர்கள் குப்பைமேடுகளை அணைத்துக் கொள்ளுகிறார்கள்"***

இன்று உலகத்தின் ஐசுவரியத்திலும் ஆடம்பரத்திலும் வாழ்ந்தவர்களுக்கு வரும் துர்பாக்கியமான நிலையாக அது இருக்கும்.

பொருளாதார அமைப்பு எவ்விதமாக அழியும்?

பொருளாதார அமைப்பு ஒரு சுழற்சி முறையில் இயங்கிவருகிறது.. இந்த சுழற்சியில் ஏதாவது ஒரு இடத்தில் பிளவு ஏற்படுமானால், ஒட்டுமொத்த அமைப்பையும் அழிவுக்கு கொண்டுவரும் என்பதை பின்வரும் வரைபடம் விளக்குகிறது -





வெகு சீக்கிரத்தில் இந்த பொருளாதார அமைப்பை அழிவுக்குக்கொண்டுவர தேவன்ஊக்குவிக்கும் பொருள் என்ன?

இயந்திரமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானம ஆகியவைதான். இயந்திரங்கள் மனித சக்தியின் இடத்தை நிரப்புகிறது. மேலும் குறைந்த செலவில் அதிக அளவு உற்பத்தியை விளைவிக்கிறது. ஆனால் போகப்போக குறைவான லாப விகிதத்திற்கு வழிநடத்துகிறது. இது அதிகப்படியான லாபத்தை சம்பாதிக்கும் வழியை முதலாளிகள் தேட நிர்ப்பந்திக்கிறது. மனித சக்திக்கு பதிலாக இயந்திர சக்தியை நம்புவதற்கு அதிக வழி ஏற்படுத்துகிறது. இதன்மூலம் மனித சக்திக்கு பதிலாக அதிக இயந்திரங்கள்பயன்படுத்தப்பட்டு, பின்நாளில் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு வழிநடத்துகிறது.

இப்படியாக, வேலையில்லா நிலைமை அதிகரிக்கும்பொழுது, ஜனங்களுடைய வாங்கும் திறன் குறைந்து, விற்பனையில் மந்தம் ஏற்படுகிறது. வேலை இழத்தலால் ஜனங்களிடையே அதிருப்தி உருவாகி, மிகப்பெரிய புரட்சிவெடிக்கும் என்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்

யோயேல் 2:2

***"அது இருளும் அந்தகாரமுமான நாள், அது மப்பும் மந்தாரமுமான நாள், விடியற்கால வெளுப்பு பர்வதங்களின்மேல் பரவுகிறதுபோல ஏராளமான பலத்த ஒரு ஜாதி தீவிரமாக வந்து பரவும். அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும் உண்டானதுமில்லை இனி தலைமுறை தலைமுறையாய்வரும் வருஷங்களிலும் உண்டாவதுமில்லை"***

இதுவே வரப்போகிற உலகப்புரட்சியாகும். இதில் கர்த்தர் ஜனங்களின் பக்கத்தில் இருப்பதை வாசிக்கிறோம் -

***"திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம்அவன்கையில் இருந்தது. தன் வலது பாதத்தைச் சமுத்திரத்தின்மேலும், தன் இடதுபாதத்தைப் பூமியின்மேலும் வைத்து .."***

**சமுத்திரம்** - துன்மார்க்கர் கொந்தளிக்கும் கடல்போல் இருக்கிறார்கள். ஜனங்களைக் குறிக்கிறது

**வலது கால்** - அவருடைய ஆதரவைக்குறிக்கிறது

**சமுத்திரத்தின்மீது இருப்பது** - கர்த்தருடைய ஆளுகை அந்த சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதை குறிக்கும்.இந்தப் புரட்சியின்போது கட்டுக்கடங்காத ஜனங்கள் ஆதிக்கம்பெற்று, முழு அமைப்பையும் அழிவுக்குக்கொண்டுவருவார்கள். இதுவே கர்த்தரின் சித்தமாக இருக்கிறது.

இப்பொழுது பூமியின் நான்காவது அமைப்பாகிய "*மதம்*" பற்றி பார்ப்போம் -

# 4. மதம்

மத அமைப்புக்களின் அழிவில் கர்த்தருடைய பார்வை பெயர்க் கிறிஸ்தவ அமைப்பு அல்லது பாபிலோன் மீது இருக்கும் . இதைக் குறித்த தீர்க்கதரிசனத்தை வாசிக்கலாம் -

வெளிப்படுத்தல் 16:13,14

***"அப்பொழுது வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்தஆவிகள் புறப்பட்டு வரக்கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள். அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச்சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப்போகிறது"***

இந்த தீர்க்கதரிசனத்தின் பொருள் -

***"அசுத்தஆவிகள்" - இது பொய் வார்த்தைகள் மற்றும் கள்ள உபதேசங்களைக் குறிக்கிறது.***

***"தவளைகளுக்கு ஒப்பான" - அந்த உபதேசங்களில் மேட்டிமையின் ஆவி இருப்பதைக் குறிப்பிடுகிறது.***

***"வாய்" - இது வார்த்தைகளின்மூலம் பிரஸ்தாபப்படுத்துவதை குறிக்கிறது***

***"வலுசர்ப்பம்" - உலகில் உள்ள அரசியல் சக்திகளுக்கு அடையாளம்***

***"மிருகம்"- போப்பு மார்க்கத்தின் இராஜ்யத்தைக் குறிக்கிறது***

***"கள்ளத்தீர்க்கதரிசி" - புராட்டஸ்டன்ட் சபைகளின் ஒருங்கிணைப்பை அடையாளப்படுத்துகிறது***

பெயர்கிறிஸ்தவ மத அமைப்புக்கள், அரசியல் சக்திகளோடு ஏற்படுத்தும் கூட்டணியை இந்த தீர்க்கதரிசன வசனப்பகுதி குறிக்கிறது.

இன்று இத் தீர்க்கதரிசனம் நிறைவேறத் துவங்கியிருப்பதை நாம் காண்கிறோம். அமெரிக்க அதிபர் ஒபாமாவும், இங்கிலாந்து பிரதமரும் வலுசர்ப்பத்தின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். ***"மிருகம்", "கள்ளதீர்க்கதரிசி"***- இருவரும் இன்றைய உலகபிரச்சனைகளான .. தீவிரவாதம், பொருளாதாரம் மற்றும் இயற்கை சீற்றங்கள் போன்றவைகளைக் குறித்து பலவகையான ஊடகங்கள்மூலம் தீர்வையும், சமாதானத்தையும் வாக்களிக்கிறார்கள். ஆனால் தேவனுடைய தெய்வீகத் திட்டத்தின் பார்வையிலிருந்து பார்க்கும்போது, இவர்கள் முற்றிலும் தவறான வழியில் பயணிப்பதைக் காண்கிறோம்.

இவர்களது வார்த்தைகள் தவளையைப்போன்று இருப்பதை வாசிக்கிறோம். இது எதைக் குறிக்கிறது?

1. தவளையின் கண்களில் காணப்படுகிற ஞானம், அறிவின் மேதாவித்தனத்தை இவர்களது வார்த்தைகள் வெளிப்படுத்தும்
2. அவைகள் ஒரு தவளையின் தோரணையில் உள்ள பகட்டையும்,சுயமுக்கியத்துவத்தை பறைசாற்றுவதையும் கொண்டிருக்கும்
3. ஒரு தவளையின் தொடர்ச்சியான சத்தத்தைப்போல இவர்கள் அதிக வார்த்தைகளை உச்சரிக்கும் தன்மையுடையோராக இருப்பர்

உலகம் பலவகையான பிரச்சனைகள் மற்றும் உபத்திரவங்களுக்குள் சென்றுகொண்டிருக்கும்போது, இந்த மூன்று அமைப்புகளின் கூட்டணியானது சமாதானத்தையும் பாதுகாப்பையும் வெளிப்படுத்தும். ஆனால் வேதமோ இதற்கு எதிர்மாறாக போதிக்கிறது -

1தெசலோனிக்கேயர் 5:3

***"சமாதானம் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருவதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும். அவர்கள் தப்பிப்போவதில்லை"***

சத்தியத்தை உணரமுடியாத இந்த மூன்று அமைப்புகளிடமிருந்து வெளிவரும்செய்தி ஜனங்களை தவறான வழியில் நடத்தும். நாம் வாசிப்பதுபோல பாபிலோன் மீண்டும் பேராதரவைப்பெறும்.

வெளிப்படுத்தல் 18:21

***"அப்பொழுது பலமுள்ள தூதனொருவன் பெரிய எந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து, இப்படியே பாபிலோன் மகா நகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒருபோதும் காணப்படாமற்போகும்"***

***"பெரிய எந்திரக்கல்"***- மகா பாபிலோனைக் குறிக்கிறது

எந்திரக்கல் என்பது பிடிக்கல் மற்றும் அரவைக்கல் ஆகிய இரண்டு பாகங்களை கொண்டது. இந்த அடையாளம், பெயர்கிறிஸ்தவர்களின் இரண்டு அமைப்புகளாகிய ரோமன் கத்தோலிக்கம் மற்றும் புராட்டஸ்டன்ட் அமைப்பைக் குறிக்கிறது. மேலும் அது தன் இறுதி அழிவை சந்திக்கும் முன்பு, உயரே "***எடுத்து***"... அதாவது ஆதரவையும் புகழையும் அடையும் என்பதை விளக்குகிறது.
இதை பின்வரும் வசனத்திலும் வாசிக்கிறோம் -

வெளிப்படுத்தல் 17:11-13

***"இருந்ததும் இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும்...நீ கண்ட பத்துக்கொம்புகளும்.. இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள். இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள்"***

இங்கு "***மிருகம்***" - போப்பு மார்க்கத்தையும்,

"***ஒரே யோசனையுடைய***" அந்த "***பத்துக் கொம்புகளும்***" - இன்றைய ஐரோப்பிய ஐக்கிய நாடுகளையும் குறிக்கும்(ஒரு காலத்தில் ஐரோப்பாவை ஆளுகை செய்த ரோம சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த நாடுகள்). இவர்கள் தங்கள் ஒருங்கிணைந்த ஆதரவை போப்பு மார்க்கத்திற்கு வெகு சீக்கிரத்தில் தருவார்கள்.

இவ்வாறு தன்னை ஆதரிப்பவர்கள் மூலமாகவே, பாபிலோன் தனக்கு அழிவைத் தேடிக்கொள்ளும் என்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**ஏசாயா:2;7-9**

***அவர்கள் தேசம் வெள்ளியினாலும் பொன்னினாலும் நிறைந்திருக்கிறது அவர்கள் பொக்கிஷங்களுக்கு முடிவில்லைளூ அவர்கள் தேசம் குதிரைகளாலும் நிறைந்திருக்கிறதுளூ அவர்கள் இரதங்களுக்கும் முடிவில்லை.***

***அவர்கள் தேசம் விக்கிரகங்களாலும் நிறைந்திருக்கிறதுளூ தங்கள் கைகளின் கிரியையையும், தங்கள் விரல்கள் உண்டுபண்ணினதையும் பணிந்து கொள்ளுகிறார்கள்.***

***சிறியவனும் குனிகிறான், பெரியவனும் பணிகிறான்ளூ ஆகையால் அவர்களுக்கு மன்னியாதிருப்பீர்***

**ஏசாயா:2;18**

***விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்துபோம்.***

**ஏசாயா:2;20**

*பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும் அந்நாளிலே, அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப்பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் வெடிப்புகளிலும் குன்றுகளின சந்துகளிலும் புகுந்துகொள்ளும்படிக்கு,*

**ஏசாயா:2;21**

***மனுஷன் பணிந்துகொள்ளத் தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன்விக்கிரகங்களையும், மூஞ்சூறுகளுக்கும் துரிஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான்.***

**2இராஜாக்கள்:10:26 27**

*பாகால் கோவில் விக்கிரகங்களை வெளியே எடுத்துவந்து, அவைகளைத் தீக்கொளுத்தி,*

*பாகாலின் சிலையைத் தகர்த்து, பாகாலின் கோவிலை இடித்து, அதை இந்நாள்வரைக்கும் இருக்கிறதுபோல மலஜலாதி இடமாக்கினார்கள்.*

**வெளிப்படுத்தல் 17:16**

*"அப்பொழுது எபிரேயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்"*




இந்த அமைப்புகள்அனைத்தும் அந்திக்கிறிஸ்து என்ற அடையாளம் காணப்பட்டு, அவைகளின் சுயரூபம் வெளியாக்கப்படும். இதனாலேயே அந்த "*மிருகம்*" "*வேசி*" என்றழைக்கப்படுகிறது.

மேலும் இதன் இறுதியான அழிவைக் குறித்து வாசிப்போம் -

வெளிப்படுத்தல் 18:21

***"அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய எந்திரக் கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து, இப்படியே பாபிலோன் மகா நகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒருபோதும் காணப்படாமற்போகும்"***

இவ்விதமாக மகா பெரியதும் பிரமிக்கத்தக்கதுமான மத அமைப்புகள் அழிக்கப்படும்.

இந்த கிறிஸ்தவ அமைப்புகளின் முழுமையான அழிவை காண்கிற உலகின் மற்ற மத அமைப்புகளின் நிலையை சற்று கற்பனை செய்துபாருங்கள்.

இந்த அமைப்புக்கள் அனைத்தும் அழிவுக்குள்ளாகிற காலகட்டத்தைக் குறித்து கர்த்தர் பேசுவதை நாம் வசனங்களில் வாசிக்கிறோம்

மாற்கு 13:19,20

***"ஏனெனில் தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான உபத்திரவம் அந்நாட்களில் உண்டாயிருக்கும். கர்த்தர் அந்நாட்களைக் குறைத்திராவிட்டால் ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை. தாம் தெரிந்துகொண்டவர்களினிமித்தமோ, அவர் அந்த நாட்களைக் குறைத்திருக்கிறார்"***

இந்த உபத்திரவக் காலத்தை "***அர்மெகதோன்***" என்று அழைக்கிறோம். 'அர்மெகதோன்" என்ற வார்த்தை எதைக் குறிக்கிறது?

**அர்மெகதோன் என்பதற்கு அழிவின் மலை** என்றுபொருள். மேலும் இது மெகிதோ பர்வதத்தைக் குறிக்கிறது. இந்த பர்வதம் இஸ்ரயேலர் தங்களுடைய முக்கியமான யுத்தங்களை நடத்தின மெகிதோவின் யுத்தபூமியை நோக்கியிருக்கிறது. அங்கு -

- கிதியோனுக்கும் மீதியானியருக்கும் (நியாயாதிபதி 7ம் அதிகாரம்)
- சவுல் ராஜாவுக்கும் பெலிஸ்தியர்களுக்கும்(1சாமுயேல் 31ம் அதிகாரம்)
- ஒசேயா ராஜாவுக்கும் பாரோன் நேகோவிற்குமான யுத்தங்கள்(2இராஜாக்கள் 23:29)

நடந்தன. அதுபோலவே இதுவும் வரப்போகிற மிகப்பெரிய இறுதி யுத்தமாக இருக்கும்.

அது ⇨ உண்மைக்கும் பொய்யிற்கும்
⇨ வெளிச்சத்திற்கும் இருளுக்கும்
⇨ முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலான யுத்தமாக இருக்கும்.

மேலும் கர்த்தர் கூறுவதுபோல, இந்த "***அர்மெகதோன்***" யுத்தம், உலகம் சந்திக்கப்போகிற கடைசி யுத்தமாக இருக்கும் என்பதை கீழே வாசிக்கிறோம்



மத்தேயு 24:21

***"இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான.."***

இந்த உபத்திரவக் காலத்தில் அநேகர் மரிப்பார்கள்என்பதை கீழே வாசிக்கிறோம் -

எசேக்கியேல் 7:15

***"வெளியே பட்டயமும் உள்ளே கொள்ளைநோயும் பஞ்சமும் உண்டு. வயல்வெளியில் இருக்கிறவன் பட்டயத்தால் சாவான், நகரத்தில் இருக்கிறவனையோ பஞ்சமும் கொள்ளைநோயும் பட்சிக்கும்"***

இருந்தாலும் அநேகர் உயிரோடு மீதம் இருப்பதையும் வாசிக்கிறோம் -

எசேக்கியேல் 7:16

***"அவர்களில் தப்புகிறவர்கள் தப்புவார்கள், ஆனாலும் அவர்கள் அனைவரும் அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தம் துக்கித்துக் கூப்பிடுகிற பள்ளத்தாக்குகளின் புறாக்களைப்போல மலைகளில் இருப்பார்கள்"***

மீதம் இருக்கும் இவர்களைப்பற்றி நாம் மறுபடியும் வாசிக்கையில் -

சகரியா 14:16

***"பின்பு எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கும், கூடாரப் பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும் வருஷாவருஷம் வருவார்கள்"***

எருசலேமுக்கு விரோதமாக எல்லா ஜாதிகளும் வரும்போது இது சம்பவிக்கும். இது நம்மை அர்மெகதோன் யுத்தத்தின் உச்சக்கட்டத்திற்கு அழைத்து வருகிறது.

## 5. முடிவு

எரேமியா 30:47

***"..ஐயோ - அந்த நாள் பெரியது.அதைப்போலொத்த நாளில்லை, அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம், ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்"***

அர்மெகதோனின் உச்சக்கட்டம் இஸ்ரயேலில் நடக்கும். இதைக் குறித்து பின்வரும் வசனத்திலும் நாம் வாசிக்கிறோம் -

எசேக்கியேல் 38:15,16

***"அப்பொழுது நீயும் உன்னுடனேகூடத் திரளான ஜனங்களும் வடதிசையிலுள்ள உன் ஸ்தானத்திலிருந்து வருவீர்கள். அவர்கள் பெரிய கூட்டமும் திரளான ஜனங்களும்***

***வடதிசையிலுள்ள உன் ஸ்தானத்திலிருந்து வருவீர்கள். அவர்கள் பெரிய கூட்டமும் திரளான சேனையுமாயிருந்து, எல்லாரும் குதிரைகளின்மேல் ஏறுகிறவர்களாயிருப்பார்கள்.. உன்னை என் தேசத்துக்கு விரோதமாகவரப்பண்ணுவேன்"***

அனைத்து ஜாதிகளும் இஸ்ரயேலை எதிர்த்து வருவார்கள், விசேஷமாக ***"வட திசையிலுள்ள ஸ்தானத்திலிருந்து"*** வருவார்கள்.

இது ரஷ்யா மற்றும் ஐரோப்பா தேசங்களைக் குறிக்கிறது. இதை பின்வரும் வசனத்திலும் வாசிக்கலாம் -

சகரியா 14:2 ***"எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்"***

இந்த யுத்தமே பின்நாளில் ***"மூன்றாம் உலக யுத்தமாக"*** இருக்கும். இதுவே உலகத்தின் மகா உபத்திரவக் காலத்தின் இறுதி அம்சமாக இருந்து, இரண்டாம் உலகத்தின் அமைப்புகள்அனைத்தையும் அழிவுக்குக் கொண்டுவருவதாக இருக்கும். இது ஒரு அணுஆயுத யுத்தமாக இருக்கவும் வாய்ப்புள்ளது. இதைக் குறித்த விவரங்களை நாம் கீழே வாசிக்கிறோம் -

சகரியா 14:12

***"எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணின எல்லா ஜனங்களையும் கர்த்தர் வாதிக்கும் முறையாவது, அவர்கள் காலூன்றி நிற்கையிலும் அவர்களுடைய சதை அழிந்துபோகும். அவர்கள் கண்கள் தங்கள் குழிகளிலே கெட்டுப்போகும். அவர்கள் நாவு அவர்கள் வாயிலே அழுகிப்போகும்"***

இது அணு கதிர்வீச்சைக் குறித்துப் பேசுகிறது. ஆனாலும் இஸ்ரயேல் தேசம் தேவனால் பாதுகாக்கப்பட்டு விடுவிக்கப்படுவதை நாம் வாசிக்கிறோம் -

சகரியா 12:8,9

***"அந்நாளிலே கர்த்தர் எருசலேமின் குடிகளைக் காப்பாற்றுவார், அவர்களில் தள்ளாடினவன் அந்நாளிலே தாவீதைப்போல் இருப்பான், தாவீது குடும்பத்தார் அவர்களுக்கு முன்பாக தேவனைப்போலும் கர்த்தருடைய தூதனைப்போலவும் இருப்பார்கள்."***

இஸ்ரயேலைச் சுற்றியிருந்த விரோதிகளிடமிருந்தும், கதிர்வீச்சிலிருந்தும் இஸ்ரயேல் எவ்விதத்தில் பாதுகாக்கப்படும்?பின்வரும் வசனத்தில் பதிலைக் காண்கிறோம் -

தானியேல் 3:27

***"தேசாதிபதிகளும், அதிகாரிகளும், தலைவரும், ராஜாவின் மந்திரிகளும் கூடிவந்து, அந்தப் புருஷருடைய சரீரங்களின்மேல் அக்கினி பெலஞ்செய்யாமலும், அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் இருந்ததைக் கண்டார்கள்"***

மீஷாயேல், அசிரியா மற்றும் அனனியா ஆகியவர்களை அக்கினியிலிருந்து விடுவித்த தேவன்தாமே இஸ்ரயேலையும் அணுஆயுத யுத்தத்திலிருந்து அற்புதமாக விடுவிப்பார். இது அனைத்து ஜாதிகளுக்கும் சாட்சியாக இருக்கும். இதைக்குறித்து வாசிப்போம் -

செப்பனியா 3:9

***"அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு நான் அவர்கள் பாஷையை சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்"***

ஆம். ***"கர்த்தருடைய நாள்"*** மனுக்குலத்தின் இருதயங்களை ஆயிரவருட அரசாட்சியின் நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தப்படுத்த உதவும்.அப்பொழுது தேவனுடைய சத்திய வார்த்தைகளிலிருந்து'சுத்தமான பாஷையும்", நீதியின் சூரியனிடமிருந்து ஆரோக்கியமும் இருக்கும் (மல்கியா 4:2).

அது ஜனங்களை சென்றடைந்து - தேவன் அவர்களை அழிக்காமல், பாதுகாக்கவே இவைகளைச் செய்தார் என்று அறிந்துகொள்வார்கள்.

1874ம் வருடம் அக்டோபர் மாதம் கண்ணுக்குப் புலப்படாமல் துவங்கின தேவனுடைய ராஜ்யம், கண்ணுக்குக் தெரிகிறதாக இஸ்ரயேலில் ஆசீர்வாதமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். அப்பொழுது பூமியின் எல்லைகள் அனைத்தும் இஸ்ரயேலில் இருக்கும் தேவனிடத்தில் திரும்புவதை வாசிக்கிறோம் -

ஏசாயா 2:2-4

***"கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும். எல்லா ஜாதிகளும்அதற்கு ஓடி வருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டுவந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார். நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை"***

மேலும் மீகா 4:1-3, எரேமியா 16:19,20, ஏசாயா 17:7,8 ஐயும் வாசித்து அறியவும்.

இஸ்ரயேலரின் பரிசுத்தரை ஜனங்கள் நோக்கிப் பார்த்து மனமாறுதல் அடைவார்கள் என்பதை கீழ்க்காணும் வசனம் கூறுகிறது -

ஏசாயா 30:22

***"உன் சுருபங்களை மூடிய வெள்ளித் தகட்டையும், உன் விக்கிரகங்களின் பொன் ஆடையாபரணத்தையும் தீட்டாக எண்ணி, அவைகளைத் தீட்டுப்பட்ட வஸ்திரம்போல எறிந்துவிட்டு, அதை சீ போ என்பாய்"***

தங்களுடைய ஆலயங்களில் தாங்கள் செய்துவைத்த வெள்ளி, பொன் உருவங்களை தங்களுடைய கைகளினாலே நொருக்கி அழித்துவிடுவார்கள். மேலும் நாம் வாசிக்கையில்,

சங்கீதம் 22:27,28

***“பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும். ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உனது சமுகத்தில் தொழுதுகொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது. அவர் ஜாதிகளை ஆளுகிறவர்”***

பூமியின் எல்லைகள் அனைத்தும் , அதோடுகூட உயிர்த்தெழுதலில் வரும் அனைத்து சந்ததிகளும் கர்த்தரிடம் திரும்பி அவரை ஆராதிப்பார்கள். மேலும் இராஜ்யத்தின் முடிவில் அனைவருடைய இறுதியான நிலையைக் குறித்து நாம் வாசிக்கையில் -

ஏசாயா 25:9

***“அக்காலத்திலே, இதோ இவரே நம்முடைய தேவன். இவருக்காகக் காத்திருந்தோம். இவர் நம்மை இரட்சிப்பார். இவரே கர்த்தர். இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்”***

அனைவரும் தங்கள் சிருஷ்டிகரும் இரட்சகரும் மீட்பருமானவரை அறிந்து, இரட்சிப்படைந்து நித்திய மகிழ்ச்சி அடைவார்கள்.

**தேவன் தாமே தொடர்ந்து நம்மை சத்தியத்தில் வளர வழிநடத்துவாராக, ஆமென்.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/biblereserch/